பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை 07.10.2025 கதிர் 331

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாணத்தில் இன்று சட்டத்தரணிகள் அனைவரும் தமது நீதிமன்றப்பணிகளைப்புறக்கணித்துப் போராட்டத்தில் குதித்துள்ளனர். ஞாயிற்றுக்கிழமை ☞ 2

# மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு சர்வதேச ஆதரவை முன்கூட்டியே பெறுக

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் வலியுறுத்து சாட்சிகள் சேகரிப்பை நீடிக்கவும் முடிவு

இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள பல பெரும் மனிதப் புதைகுழிகளை சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப தோண்டுவதற்குப் போதுமான நிதி, மனித மற்றும் தொழில்நுட்ப வளங்களை உறுதி செய்வதற்கு சர்வதேச ஆதரவை இலங்கை ஆளும்தரப்பு முன்கூட்டியே பெறவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வலியுறுத்துகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர்பில் மீண்டும் ஒரு தீர்மானம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

1. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வில் வழங்கிய வாய்மொழி அறிக்கையையும், தற்போதைய அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தின் அறிக்கையையும் தீர்மானம் வரவேற்கிறது;

2. இலங்கை ஆளும்தரப்பின் அழைப்பின் பேரிலும் வழங்கப்பட்ட வசதிகளுடனும் ஜுன் 2025இல் ☞ 2

## கல்விசார் பணியாளரை உள்வாங்க பல்கலைக் கழங்களுக்கு அனுமதி

புதிய கல்விசார் பணியாளர்களை, உள்வாங்குவதற்கு அனைத்துப் பல்கலைக்கழகங்களும் விடுத்த கோரிக்கைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. ☞ 2

## அரசுத் தலைவர் ஆணைக்குழு நிறுவி மகிந்தவை விசாரித்தேயாக வேண்டும்

### சரத்பொன்சேகா கோபாவேசம்

தற்போது படையினர் தொடர்பில் முதலைக்கண்ணீர் வடிக்கும் ராஜபக்சக்கள் 2005இல் தேர்தல் வெற்றிக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுத கொள்வனவுக்காக 2 மில்லியன் டொலர்களை வழங்கினர். 2009 இறுதிப் போரின் போது வேலுப்பிள்ளை பிரபாகரனை தப்பிக்கச் செய்வதற்காக போர் நிறுத்தத்தை அறிவிக்குமாறு பணிப்புரை விடுத்து 4000க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்படுவதற்கு மகிந்த ராஜபக்ச வழியேற்படுத்திக் கொடுத்து தேசத் துரோகம் இழைத்துள்ளார். எனவே ☞ 6

### பெலியத்த சனாவுடன் ஆளும்தரப்புக்கு தொடர்பு என

## தான் கூறியதை நிரூபிக்காவிட்டால் விமல் வீரவன்ஸ மீது சட்டம் பாயும்

### அமைச்சர் சுனில் வட்டகல கொதிப்பு

கைது செய்யப்பட்டுள்ள ‘பெலியத்த சனா‘ எனப்படும் சனத் வீரசிங்கவுக்கும் ஆளும்தரப்புக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. விமல் வீரவன்ச கூறுவது உண்மையென்றால் அவர் அதனை ஆதாரங்களுடன்நிரூபிக்கவேண்டும். அவ்வாறில்லைஎனில்சாட்சிகட்டளை சட்டத்துக்கமைய அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் ☞ 2

## வாக்குமூலமளிக்க வேறுநாள் கேட்கும் விமல் வீரவன்ஸ

அண்மையில் கைது செய்யப்பட்ட புவக்தண்டாவே சானா தொடர்பில் வாக்குமூலமளிப்பதற்குத் தனக்கு வேறொரு நாளை ஒதுக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தங்காலை பொலிஸ் நிலையத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அண்மையில் கைது செய்யப்பட்ட புவக்தண்டாவே சானா என்ற நபர் ஆளும்தரப்பைச் சேர்ந்தவர் ☞ 2

## மருந்துப் பற்றாக்குறையை தீர்க்க சட்டங்கள் சில தடையாகவுள்ளன

### இப்படிச் சொல்கிறார் சுகாதார அமைச்சர்

மருந்துப்பற்றாக்குறைக்குத்தீர்வுகாண்பதில் தற்போதுள்ள சில சட்டங்கள் தடையாகவுள்ளன. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அந்தச் சட்டங்களை மாற்றுவது ஒரு சிக்கலாக இருக்கலாம் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ☞ 2

## சிறார் தண்டனைக்கு எதிரான சட்டம் பாடசாலையை இலக்கு வைக்கிறது

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

சிறுவர்களுக்கு எதிரான அனைத்து வகையான தொந்தரவுகளையும் தடுப்பதற்காக தண்டனைச்சட்டக்கோவையில் திருத்தம் மேற்கொள்ளும்போது புதிய சட்டமூலம் கொண்டுவரப்படுவது பாடசாலையை இலக்குவைத்தாகுமென இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்ணாந்து தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர்களுக்கு எதிரான அனைத் துவகையான தொந்தரவுகளை தடுப்பதற்காக தண்டனைச்சட்டக்கோவையில் திருத்தம் ☞ 2

## ‘ஏக்கிய ராஜ்ய’ விற்குள் தீர்வை முடக்கவே தமிழ் அரசு 13ஐ நிறைவேற்றக் கேட்கிறது

### வழக்கம் போல கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

38 வருடம் நடைமுறைப்படுத்தாத அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை இலங்கை தமிழ் அரசுக் கட்சி தற்போது அமுல்படுத்த கோருவது ஏக்கிய ராஜ்ய என்ற ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வை முடக்குவதற்காகவே என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இலங்கைதமிழ்அரசுக்கட்சிதலைவர் சிவஞானம் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள்தொடர்பாகயாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 6

## வடக்குச் சட்டத்தரணிகள் இன்று பணிப் புறக்கணிப்பு

வடக்கு மாகாணத்தில் உள்ள சட்டத்தரணிகள் அனைவரும் இன்று பணிகளைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஒக்டோபர் 5 -2025 அன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்றும் சட்டத்தரணி ஒருவரின் இல்லத்தில் அவரை கைது செய்யும் நோக்கத்துடன் நுழைந்து, சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரம் எதுவுமின்றி தேடுதல் நடத்தும் தோரணையில் பொலிஸார் அச்சுறுத்தலாக நடந்து கொண்டதைக்கண்டித்து சட்டத்தரணிகள் இந்தப்போராட்டத்தில் ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

அச்சுவேலியில் உள்ள பெண் சட்டத்தரணி ஒருவரது வீட்டிற்கு அவரைக் கைது செய்வதற்குச்சென்ற பொலிஸார் அவர் அங்கு இல்லாத நிலையில் அவரது அலுவலகம் மற்றும்வளவினுள்அவரைத்தேடிசோதனை நடத்தியதைக் கண்டத்தே இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம்.

சட்டத்தரணிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான இந்தப் பிரச்சினை கடந்த சில வருடங்களாகவே தொடர்கின்றது. சட்டத்தரணிகளைக் கைது செய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதும், அதைத் தவிர்க்க சட்டத்தரணிகள் நீதிமன்றங்களில் முன்பிணை எடுப்பதும் பின்னர் சட்டமா அதிபரைச் சந்தித்து சட்டத்தரணிகளைக் கைது செய்வதைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்வதுமாகஇந்தப்பிரச்சினைஇழுபறிப்பட்டுக் கொண்டே செல்கிறது.

யாழ். மாவட்டத்தில் காணிகளை விற்பதில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்ற குற்றச்சாட்டுக்கள் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் அல்லது அவற்றின் புதிய உரித்தாளர்களால் பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவற்றை விசாரணை செய்யும் பொலிஸார் இந்த மோசடிகளைச் சட்டத்தரணிகளும்இணைந்தேசெய்கின்றனர் என்ற அடிப்படையில் அவர்களையும் சந்தேகநபர்களாகச்சேர்த்துக்கொள்கின்றனர். இதனடிப்படையிலேயே அவர்களைக் கைது செய்வதற்கானமுயற்சிகள்இடம்பெறுகின்றன.

ஆனால், காணிக் விற்று வாங்கும் நடவடிக்கைகளில் ஒரு நொத்தாரிசாகச் சட்டத்தரணிகள் இரு தரப்பினருக்கும் இடையிலான உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு தரப்பே தவிர, அவர்கள் நேரடியாக மோசடியில் ஈடுபடாத வரையில் அவர்கள் மீது குற்றவியல் சட்டங்களின் கீழ் வழக்குகள் தொடரப்படலாகாது என்பது சட்டத்தரணிகள் தரப்பு வாதம். இதனடிப்படையில் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் கொழும்புக்குச் சென்று அரசியல் தலைவர்களையும் சட்ட மா அதிபரையும் சந்தித்துத் தமது பிரச்சினையை எடுத்து விளக்கியிருந்தார்கள்.

அதனடிப்படையில் சட்டத்தரணிகளைக் கைது செய்வதாக இருந்தால் அதற்கு முன்பாக சட்ட மா அதிபரிடமிருந்து அனுமதி பெறப்படவேண்டும்என்றஒருசுற்றறிக்கையை அப்போதைய சட்டமா அதிபர் பொலிஸாருக்கு விடுத்திருந்தார். இதைத் தொடர்ந்து காணி மோசடி வழக்குகள் பலவும் வெகுவாகத் தாமதமாவதாகத் தற்போதைய பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதற்கான காரணத்தைப் பொலிஸ் மா அதிபர் வினவியபோது சட்ட மா அதிபரின் சுற்றிக்கையினால் அவர்களின் கருத்துக்குவிண்ணபித்துக்காத்திருக்கின்றோம் என்று பதிலளிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பொலிஸ் மா அதிபர் சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து தற்போதைய சட்டமா அதிபர் முன்னைய சுற்றறிக்கையைத் திருத்தியமைத்துள்ளார். அதன்படி இனிப் பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கையில் சட்ட மா அதிபரின் தலையீடு அவசியமற்றதாகியுள்ளது. அதையடுத்து சட்டத்தரணிகள் மீதான நடவடிக்கைகள் மீண்டும் தீவிரமடையும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனை எப்படியோ அறிந்துகொண்ட சட்டத்தரணிகள் பிரதிப் பொலிஸ் மா அதிபரை யாழ்ப்பாணத்தில்சந்தித்துசட்டத்தரணிகளுக்கு எதிரான கைதுகள் குறித்த தமது தரப்பு நியாயத்தை, வாதத்தை முன்வைத்தனர். அவற்றை ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பார் என்று டிஐஜி தெரிவித்திருந்தார்.

ஆனாலும்,அதன்பின்னரேஅச்சுவேலியில் பெண் சட்டத்தரணியைக் கைது செய்வதற்குப் பொலிஸார் முயற்சித்துள்ளனர். அவர் பின்னர் பொலிஸாரின் விசாரணைக்காக தாமாகவே முன்சென்ற நிலையில் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு பிணையில்விடுவிக்கப்பட்டார். இப்போது இந்த நடவடிக்கையைக்கண்டித்தேசட்டத்தரணிகள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

காணிவிற்பனைஒன்றிற்காகவழங்கப்பட்ட 'பவர் ஒவ் அற்றோனி'யில் இடம்பெற்ற மோசடி தொடர்பாகவே இப்போது பிரச்சினை எழுந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள காணி ஒன்று கொழும்பில் உள்ள ஒருவரிடம் ஈடு வைக்கப்பட்டுள்ளது. ஈடு மீளப்படாத நிலையில் பணம் கொடுத்தவர் காணியைத் தனது உரிமையாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுத்தபோதே அந்தக் காணிக்குரியவர் உண்மையில் வேறொரு உரிமையாளர் என்பதும் 'பவர் ஒவ் அற்றோணி' மோசடி மூலம் விற்கப்பட்ட காணி உறுதியேதம்மிடம் ஈடு வைக்கப்பட்டது என்பதும் தெரிய வந்திருக்கிறது. இதையடுத்தே தற்போதைய நடவடிக்கைகளைப் பொலிஸார் முடுக்கி விட்டுள்ளனர்.

ஆனால், சட்டத்தரணியைத் தேடிச்சென்ற பொலிஸார் அவர் வீட்டில் இல்லாதபோது சட்ட ரீதியான அனுமதி எதுவுமின்றி அவரது வீட்டில் சோதனையிடும் தோரணையில் நடந்துகொண்டது தவறு என்று சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர். இதனைக் கண்டித்தே இன்றைய போராட்டம். ஒரு சட்டத்தரணி மட்டுமல்ல இன்னும் பலர் இதேபோன்ற பொலிஸாரின் நடவடிக்கையை எதிர்கொண்டிருக்கின்றனர். அவர்களில் ஒருசிலர் தமிழ் அரசியல்வாதிகளின் நெருங்கிய உறவினர்கள் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தநிலையில்பிரச்சினை எதை நோக்கிச் செல்லும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மனிதப்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயராணையர் இலங்கைக்கு வருகை தந்ததையும், உயராணையர் அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் சிறப்பு நடைமுறைகளுடன் ஆளும்தரப்பின் ஈடுபாட்டையும் தீர்மானம் வரவேற்கிறது, அத்தகைய ஈடுபாடு மற்றும் உரையாடலைத் தொடர ஊக்குவிக்கிறது, மேலும் அலுவலகம் அளித்த பரிந்துரைகள் மற்றும் சிறப்பு நடைமுறைகளைத் தீவிரமாக பரிசீலிக்க ஆளும்தரப்பை அழைக்கிறது;

3. இலங்கையில் மனித உரிமைகளை அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கும் ஊழல் மற்றும் பொருளாதார தவறான மேலாண்மைக்கான பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை ஆளும்தரப்பு எடுத்த நடவடிக்கைகளைத்தீர்மானம்அங்கீகரிக்கிறது, மேலும் தற்போதைய மற்றும் முன்னாள் பொது அதிகாரிகள் செய்த ஊழல்கள் குறித்த விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர உத்தரவாதம் அளிக்கப்படும் இடங்களில், ஊழல்தொடர்பானமேலும்நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது;

4. இன மோதல்களால் இலங்கை அனுபவித்த பெரும் துன்பங்களை இலங்கை ஆளும்தரப்பு அங்கீகரித்ததையும், பிளவுபடுத்தும் இனவெறி அரசியல் மீண்டும் எழுவதைஅனுமதிக்காததையும், அனைத்துச் சமூகங்களிலும் தனிநபர்களின் பகிரப்பட்ட வலி மற்றும் துயரத்தை அங்கீகரித்ததையும், ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கும், சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுப்பதற்கும், பாகுபாடு இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கும்அதன்உறுதிப்பாட்டையும் தீர்மானம் வரவேற்கிறது;

5. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கும், அதை நீக்குவதை ஆராய ஒரு குழுவை நியமிப்பதற்கும் இலங்கை ஆளும்தரப்பு அளித்த உறுதிப்பாட்டைத் தீர்மானம் வரவேற்கிறது, அதேநேரத்தில் அந்தச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல்கள் தொடர்கின்றன,மேலும்தமிழ்மற்றும்முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களை விகிதாசாரமற்ற முறையில் பாதித்துள்ளன என்ற அறிக்கைகள் குறித்துத் தீர்மானம் கவலை தெரிவிக்கிறது, மேலும் சட்டத்தின் பயன்பாட்டிற்கு தடை விதிக்கவும், அதை நீக்குவதை விரைவுபடுத்தவும், பயங்கரவாதத்தைஎதிர்த்துப்போராடுவதற்கான எந்தவொரு சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் உட்பட சர்வதேச சட்டத்திலிருந்துஎழும்அரசின்கடமைகளுக்கு முழுமையாக இணங்குவதை உறுதி செய்யவும்ஆளும்தரப்பைவலியுறுத்துகிறது;

6. இணையப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கும், சட்டத்தில் திருத்தங்களை உருவாக்குவதற்கு ஒரு குழுவை நியமிப்பதற்கும் இலங்கை ஆளும்தரப்பு அளித்த உறுதிமொழியை வரவேற்கிறது, அதேநேரத்தில் சட்டத்தில் நீதித்துறை மேற்பார்வை இல்லாதது மற்றும் குற்றங்கள் மற்றும் அமலாக்க அதிகாரங்களின் பரந்த வரையறை பற்றிய கவலைகளை ஒப்புக்கொள்கிறது, மேலும் கருத்து மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கான ஆளும்தரப்பின் சர்வதேச கடமைகளுடன் சட்டம் முழுமையாக இணங்குவதை உறுதிசெய்ய அதன் திருத்தத்தை விரைவுபடுத்த ஆளும்தரப்பை ஊக்குவிக்கிறது;

7. இலங்கையில் பல கட்டாயமாக காணாமல்போன வழக்குகள் தீர்க்கப் படாமல் இருப்பதையும், இதனால் காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்ட நீண்டகால துன்பங்களையும், காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் சுயாதீனமான மற்றும் பயனுள்ளசெயல்பாட்டின்முக்கியத்துவத்தையும் அங்கீகரிக்கிறது;

8. இலங்கையில் பல பெரும் புதைகுழித் தளங்களை அடையாளம் காண்பதை ஒப்புக்கொள்கிறது, போதுமான வளங்களுடன் தொடர்ச்சியான பணிகளை வழங்க வேண்டியதன்அவசியத்தைவலியுறுத்துகிறது, மேலும் சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப தோண்டி எடுப்பதற்குப் போதுமான நிதி, மனித மற்றும் தொழில்நுட்ப வளங்களை உறுதி செய்வதற்கு சர்வதேச ஆதரவை முன்கூட்டியேபெற இலங்கை ஆளும்தரப்பை வலியுறுத்துகிறது;

9. பல நீண்டகாலப் பிரச்சினைகளில் புதுப்பிக்கப்பட்ட திசைக்கு இலங்கை ஆளும்தரப்பின்உறுதிப்பாட்டைவரவேற்கிறது, மனித உரிமை மீறல்கள் மற்றும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புத் தொடர்பான சில வழக்குகளில் விசாரணைகளை மீண்டும் தொடங்குவதை ஒப்புக்கொள்கிறது, மேலும் சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு இணங்க விசாரணைகள் மற்றும் வழக்குகளை விரைவுபடுத்தவும், திறன்களைவலுப்படுத்தசர்வதேசதொழில்நுட்ப உதவியைப் பெறவும், பாதிக்கப்பட்டவர்கள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் முழு பங்கேற்பை உறுதி செய்யவும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் ஆளும்தரப்பை வலியுறுத்துகிறது;

10. ஒருசுயாதீனமானபொதுவழக்குரைஞர் அமைப்பை நிறுவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைப் பாராட்டுடன் ஒப்புக்கொள்கிறது, மேலும் அந்த அமைப்பு முழுமையாக சுதந்திரமாகவும், பயனுள்ளதாகவும், வலுவாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது;

11. மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையானமீறல்கள்தொடர்பானஅனைத்து குற்றங்களிலும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் முழு பங்கேற்புடன், உடனடி, முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைகளை உறுதிசெய்யவும், தேவைப்பட்டால், வழக்குத் தொடரவும் இலங்கை ஆளும்தரப்பை வலியுறுத்துகிறது;

12. சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், பத்திரிகையாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள், குறிப்பாக பெண்கள், அனைத்து வகையான துன்புறுத்தல்கள் மற்றும் பழிவாங்கல்களிலிருந்து விடுபடும் ஒரு சூழலைஉருவாக்கஇலங்கைஆளும்தரப்பை வலியுறுத்துகிறது;

13. இராணுவம் மற்றும் பிற அரசு நடிகர்களால் இன்னும் வைத்திருக்கப்பட்டு பொருளாதார ரீதியாகப் பயன்படுத்தப்படும் மீதமுள்ள நிலங்களை விடுவிப்பதன் முக்கியத்துவத்தையும், தொல்பொருள், மத மற்றும்பாதுகாப்புபிரச்சினைகள்சம்பந்தப்பட்ட நிலத் தகராறுகளை வெளிப்படையான, ஆலோசனை,பாரபட்சமற்றமற்றும்பாகுபாடற்ற முறையில் தீர்ப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது;

14. உயர் ஆணையர் அலுவலகத்தின் அதிகாரத்தையும், மனித உரிமைகள் கவுன்சிலால் கோரப்பட்ட அனைத்து பணிகளையும் 2022 ஒக்டோபர் 6 நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தில் நீடிக்க முடிவு செய்கிறது, மேலும் அதன் அறுபத்து மூன்றாவது அமர்வில் எழுத்துப்பூர்வ புதுப்பிப்பையும், அதன் அறுபத்தி ஆறாவது அமர்வில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளில் முன்னேற்றம் குறித்த விரிவான அறிக்கையையும் முன்வைக்க அலுவலகத்தை கேட்டுக்கொள்கிறது, இது ஒரு ஊடாடும் உரையாடலின்போது விவாதிக்கப்படும்.

## வாக்குமூலமளிக்க....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று விமல் வீரவன்ச வெளிப்படுத்திய விடயங்கள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக திங்கட்கிழமை தங்காலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அவருக்கு அழைப்பாணை விடுத்திருந்தார்.

தங்காலை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருள் குவியலை நாட்டிற்குக் கொண்டுவந்தமைதொடர்பில், அண்மையில் கைது செய்யப்பட்ட புவக்தண்டாவே சானா எனப்படும் சனத் வீரசிங்கவின் அரசியல் தொடர்புகள் குறித்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஒக்டோபர் 2 ஊடகச் சந்திப்பொன்றை நடத்திக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த அழைப்பாணை சனிக்கிழமை மதியம் தனக்குக் கிடைத்ததாகக் குறிப்பிட்ட விமல் வீரவன்ச, நேற்று தங்காலை பொலிஸ் நிலையத்துக்கு முன்னிலையாக முடியாது, வேறொருதிகதியை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கமைய பிறிதொரு தினத்தை வழங்க தங்காலை பொலிஸ் இணக்கம் தெரிவித்துள்ளது.

## கல்விசார்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நலக்க கலுவேவ இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது:

அண்மைய மாதங்களில் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீண்டும் தொடங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. கல்வி மற்றும் கல்விசாரா பணியாளர்கள் தேவைகளுக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகமும் சமர்ப்பித்த கோரிக்கைகளுக்கு அமைவாக தற்போது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பிரதமர்அலுவலகத்தின்கீழ்செயற்படுமொரு குழுவால் பல்கலைக்கழகங்களுக்கு தேவையான ஆட்சேர்ப்பு கோரிக்கைகள் ஆராயப்பட்டேஅங்கீகாரம்வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக பல்கலைக்கழகங்கள் தொடர்புடைய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்குச் சிறிது கால அவகாசம் தேவையாக உள்ளது.

பல ஆண்டுகளாக ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டிருக்கும்போது பல்கலைக்கழகங்களில் ஆளணிப் பற்றாக்குறை ஏற்படுவது இயல்பானது, ஆனால் அவற்றைத் தீர்க்கும் செயன்முறை இப்போது தொடங்கப்பட்டுள்ளது. எனினும் பதவி வெற்றிடங்களை ஒரே இரவில் பூர்த்தி செய்வது சாத்தியமற்றது - என்றார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி உச்சத்தில் இருந்தபோது, செலவினங்களைக் குறைப்பதற்காக பல அரச துறைகளில் பணிக்கமர்த்தல் நிறுத்தப்பட்டமையால் ஆட்சேர்ப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படவில்லை.

இதனால் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள், நிர்வாக ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளின் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது.

## வடக்குச்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடவுள்ளனர்.

யாழ்ப்பாணம்விசேடகுற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸாரின்நடத்தையைக்கண்டித்துஇன்று வட மாகாணத்தில் உள்ள சட்டத்தரணிகள் அனைவரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடஉள்ளனர் என்று யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் நேற்று அறிவித்தது.

## சிறார்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளும்போது புதிய சட்டமூலம் கொண்டுவரப்படுவது பெரும்பாலும் பாடசாலையைஇலக்குவைத்தாகும். தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட இருக்கும் தண்டனைச் சட்டக்கோவையின் (19ஆவது அத்தியாயம்) திருத்தச் சட்டமூலமும் அவ்வாறானதாகும்.

இந்த சட்டமூலம் தொடர்பில் ஒருசில அமைச்சர்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்த கருத்து மிகவும் அருவருக்கத்தகதாகவேநாங்கள்காண்கிறோம். 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் பாலியல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் எந்த தடையும் இல்லை என தெரிவித்திருந்தனர். அதேபோன்று ஓரின சேர்க்கைக்கு ஆதரவளிக்கும் வகையில் கருத்து தெரிவித்திருப்பதும் சமூகம் என்ற அடிப்படையில்கேள்விக்குட்படுத்தவேண்டிய விடயமாகும்.

இந்தச் சட்ட திருத்தத்தின் மூலம் பாடசாலைக்கு எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவிக்கிறார். ஆனால் இந்த சட்ட திருத்தம் மேற்கொள்ளப்படுவது நூற்றுக்கு 80 வீதம் பாடசாலைகளை இலக்குவைத்தாகும். இந்தச் சட்ட திருத்தம் காரணமாக பாடசாலையின் ஒழுக்கத்தைப் பாதுகாப்பது பிரச்சினையாக அமைவதுடன்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தாஜுதீன் கொலையில் தொடர்புபட்டோர் வெகுவிரைவிலே அம்பலத்திற்கு வருவர்

## பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவிப்பு

றக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய விசாரணைகள் தீவிரமடைந்துள்ளதால் சிலர் கலக்கமடைந்துள்ளனர். அந்த கலக்கத்துக்கும் தாஜுதீன் கொலைக்குமிடையிலானதொடர்புகள் என்னஎன்பதுவெகுவிரைவில்நாட்டுக்கு வெளிப்படுத்தப்படுமெனபொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகவே சிலர் கலக்கமடைந்துள்ளனர். இந்தக் கலக்கத்துக்கும் தாஜுதீன் கொலைக்குமிடையிலானதொடர்புகள் என்ன என்பது விசாரணைகள் மூலம் வெளிப்படும். குறிப்பிட்டவொரு குடும்பமே இவ்வாறு அளவுக்கதிக கலக்கத்தில் உள்ளது.

அந்தகுடும்பம்ராஜபக்சகுடும்பமா அல்லது வேறு குடும்பமா என்பதை எம்மால் கூறமுடியாது. ஆனால் விசாரணைகளுக்கமைய உண்மைகள் வெளிப்படுத்தப்படும். கைது செய்யப்படுபவர்களின்வாக்குமூலங்கள் பெறப்படும். அவற்றிலிருந்து கிடைக்கக் கூடிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகள் எவ்வித தடைகளும் இன்றி முன்னெடுக்கப்படும். யாரும் பயப்பட வேண்டிய தேவையில்லை. விசாரணைகள் மூலம் நிச்சயம் நாட்டுக்கு உண்மைகள் வெகுவிரைவில் வெளிப்படுத்தப்படும் - என்றார்.

# காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் திடீர் பதவி நீக்கம்

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகம்பத்மசிறிலியனகே பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக காணிமற்றும்நீர்ப்பாசனபிரதியமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்த தாவது:

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான நிலத்தை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் கோப் குழுவில் வெள க்கொணரப்பட்டது.

அதனையடுத்து அவர் மீது நடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளதோடு ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகமாக தற்போது திணோகா ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார் என்றார்.







காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழர் எதிர்பார்ப்புகளுக்கு திருப்திதராத ஐ.நா. தீர்மானம்

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) 60ஆவது அமர்வில், இலங்கை தொடர்பான தீர்மானம் நேற்று மீண்டும் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்ட இந்த்தத தீர்மானம், 2009ஆம் ஆண்டில் போர் முடிந்ததிலிருந்து தொடர்ந்துவரும் இலங்கையின் மனித உரிமை நிலமைக்கு ஒரு மதிப்பீட்டாகக் கருதப்படுகிறது. ஆனால், தமிழர்களின் நீண்டகால நீதிக்கும் சமாதானத்திற்குமான எதிர்பார்ப்புக்களைப் பொறுத்தவரையில், இந்தத் தீர்மானம் திருப்திகரமானது அல்ல.

### தீர்மானத்தின் வரம்புகள்

தீர்மானத்தில் மனித உரிமை மீறல்கள், காணாமல் ஆக்கப்பட்டோர், போர் குற்றச்சாட்டுகள் தொடர்பான விடயங்கள் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதேசமயம், விசாரணைகள் உள்நாட்டிலேயே நடைபெறவேண்டும் என்ற இலங்கை அரசின் வாதத்தையும் நேரடியாக எதிர்க்காத வகையில் தீர்மானம் அமைந்துள்ளது. இது கடந்த காலங்களில் வெளிநாட்டு பார்வையாளர்கள், மனித உரிமை அமைப்புகள், மற்றும் வடகிழக்கு மக்கள் வலியுறுத்தி வந்த பன்னாட்டுக் கண்காணிப்பு மற்றும் பன்னாட்டு நீதி தொடர்பான கோரிக்கைகள் கணக்கிலெடுக்கப்படாத்தைக் காட்டுகின்றது.

"விசாரணை நடவடிக்கைகள் மேம்படுத்தப்படவேண்டும்", "மனித உரிமை ஆணையத்தின் சுதந்திரம் உறுதிசெய்யப்படவேண்டும்" போன்ற பரிந்துரைகள் நல்ல நோக்கத்துடன் இருந்தாலும், அவை நடைமுறைக்கு வரும் காலக்கட்டம் பற்றிய தெளிவின்மை தொடர்கிறது.

### புறக்கணிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை இந்தத் தீர்மானம் நேரடியாகக் கவனித்ததாகத் தெரியவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், போர் கைதிகளின் நிலை, நில மீட்பு, மற்றும் பொருளாதார பின்தங்கல் ஆகிய முக்கிய பிரச்சினைகள் மீண்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அவை குறித்துக் கவனம் செலுத்தவேண்டும் இலங்கை ஆளும்தரப்பைக் கேட்டுக்கொள்வதோடு இந்தத் தீர்மானம் தன்னை மட்டுப்படுத்திக்கொள்கிறது.

இலங்கை அரசு மீதான சர்வதேச அழுத்தமே கடந்த காலத்தில் உண்மையான மாற்றத்திற்குத் தூண்டுகோலாக இருந்தது என்பது அனுபவத்தால் உறுதியாகிய ஒன்று. ஆனால் இம்முறை அந்த அழுத்தம் குறைந்திருப்பது ஆளும்தரப்பிற்கு நிம்மதியான நிலையை உருவாக்கியுள்ளது.

### ஐ.நா.வின் பணி மீதான மீள்மதிப்பாய்வு

மனித உரிமைகளைக் காக்கும் சர்வதேச அமைப்பாகிய ஐக்கிய நாடுகள், இலங்கையில் நீண்டகாலமாக நடைபெற்று வரும் அநியாயங்களுக்கு தீர்வு காண இயலாமல் திணறுவது போலத் தோன்றுகிறது. உறுதியான நடவடிக்கைகள் எடுக்காமல், ஆலோசனை மற்றும் பரிந்துரைகளில் மட்டுமே தங்கி இருப்பது அதன் நம்பகத்தன்மையை குறைக்கக்கூடும்.

தமிழர்களின் நம்பிக்கை இன்னும் ஐ.நா.விலேயே உள்ளது. ஆனால், நீதிக்காகக் காத்திருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இது போதுமான நம்பிக்கையளிக்காத தீர்மானமாகவே தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் தீர்மானத்தின் தலைப்புக் கூறுவது போன்று இந்தத் தீர்மானம் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் கால தாமத்தையே வெளிப்படுத்துகின்றது. தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம் என்பது ஐ.நாவிற்குத் தெரியாததல்ல. அதேபோன்று பரிகாரி நீதி இன்றி நல்லிணக்கம் சாத்தியமானதுமல்ல.

### எதிர்காலம்

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல், பொருளாதார நெருக்கடி, மற்றும் வடகிழக்கில் நிலவும் சமூக அதிருப்தி ஆகியவற்றை கருத்தில் கொண்டால், இத்தீர்மானம் ஒரு தவறவிடப்பட்ட வாய்ப்பாகும்.

உண்மையான தீர்வை நோக்கிய பன்னாட்டு வழிமுறைகள் — உதாரணமாக, சர்வதேச விசாரணை ஆணையம் அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) — குறித்து ஐ.நா. தீர்மானம் இன்னும் பேச முன்வராதது வருத்தமளிக்கிறது.

தமிழர்கள் எதிர்நோக்கும் நீதி மற்றும் அமைதியைப் பெறுவதற்கு, ஐ.நாவின் பங்கு இன்னும் வலுவாகவும் நடைமுறை ரீதியாகவும் அமைய வேண்டியது அவசியம்.

மனித உரிமை மீளுருவாக்கம் என்ற இலக்கு இலங்கையில் இன்னும் தொலைவில் இருக்கிறது. ஆனால், அந்த இலக்கை நோக்கி பன்னாட்டுச் சமூகத்தின் உறுதியான நடவடிக்கைகள் மட்டுமே புதிய நம்பிக்கையை உருவாக்கும் என்பதை ஐ.நா. நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

## தாஜுதீனின் வாகனத்தின் பின்னே கஜ்ஜா சென்றிருக்க சாத்தியமுண்டு

### குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தகவல்

றக்பி வீரர் வாசிம் தாஜுதீனின் இறப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, அவரது காரைப் பின்தொடர்ந்த ஜீப்பில், சந்தேகநபரான 'கஜ்ஜா' என்று அழைக்கப்படும் அருண விதானகமகே பயணித்திருக்கலாம் என்று குற்றப் புலனாய்வுத் பிரிவு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தாஜுதீனின் கொலை தொடர்பாக, கடந்த 13 ஆண்டுகளாக குற்றப் புலனாய்வுத் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் இக்கொலைக்கு நேரடியாகப் பொறுப்பானவர்களை இன்னும் உறுதியாக அடையாளம் காண முடியவில்லை.

இந்நிலையில் மித்தேனியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட கஜ்ஜா, தாஜுதீனின் இறப்பிற்கு முன்பு அவரது காரைப் பின்தொடர்ந்த ஜீப்பில் பயணித்ததை உறுதிப்படுத்தும் வாக்குமூலத்தை அவரது மனைவி புலனாய்வாளர்களிடம் அடையாளம் காட்டியிருந்தார்.

விசாரணையின்போது சம்பவத்துடன் தொடர்புடைய மறைகாணி (சி.சி.டி.வி) காட்சிகள் அவருக்குக் காண்பிக்கப்பட்டபோது அவரது மனைவியால் அடையாளம் காண்பிக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து, காட்சிகளில் காணப்பட்ட நபர் உண்மையில் கஜ்ஜாதான் என்பதைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகள் உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த தடயத்தினை மேலும் உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையிலும் ஏனையவர்களை அடையாளம் காண்பதற்குமான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக குற்றப் புலனாய்வுத் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, 'கஜ்ஜா' என்று அழைக்கப்படும் அருண விதானகமகேவின் மூத்த புதல்வர், அக்காணொளியில் காணப்படுவது தனது தந்தையார் அல்லது என்றும் அது சம்பந்தமாக விசாரணை மீள ஆரம்பிக்குமாறும் கோரியுள்ளது

## கம்மன்பிலவும் விமலும் இனவாதத்தை முன்னிலைப்படுத்தியே இயங்குகின்றனர்

### தொழில் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போலியான விடயங்களை சமூகமயப்படுத்த முயற்சிக்கும் போது அந்த விடயங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு முன்னிலையாக வேண்டும். இனவாதத்தை முன்னிலைப்படுத்தியே இவர்கள் செயற்படுகிறார்களென தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின்போது தேர்தலில் போட்டியிடாமலே தோல்வியை அறிந்து விலகிக் கொண்டவர்கள் இன்று தேசப்பற்றாளர்கள் போல் பேசுகிறார்கள். இந்த நாடு இனவாதத்தால் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. அதற்கு இவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோர் இன்றும் கடந்த ஆளும்தரப்புதான் ஆட்சியில் உள்ளது என்று நினைத்துக் கொண்டு செயற்படுகிறார்கள். போலியான விடயங்களை சமூகமயப்படுத்த முயற்சிக்கும்போது அந்த விடயங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு முன்னிலையாகவேண்டும்.

இனவாதத்தை முன்னிலைப்படுத்தி இழந்த அரசியல் செல்வாக்கை மீண்டும் கைப்பற்ற இவர்கள் முயற்சிக்கிறார்கள். நாட்டு மக்கள் இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். மக்கள் மத்தியில் தவறான விடயத்தை சமூகமயப்படுத்த இடமளிக்க முடியாது - என்றார்.

## சம்பத் மனம்பேரி என்னுடைய ஒருங்கிணைப்பாளரே இல்லை

### முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் கதறல்

சம்பத் மனம்பேரி என்பவர் எனது ஒருங்கிணைப்புச் செயலாளர்களில் ஒருவராகப் பணியாற்றவில்லை என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தவறான தகவல்களைப் பரப்புபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது மனம்பேரி என்ற ஒருவர் எனது ஒருங்கிணைப்புச் செயலாளர்களில் ஒருவர் என்று கூறுகிறார்கள். நான் இந்த மாவட்டத்திலிருந்து மட்டுமே ஒருங்கிணைப்புச் செயலாளர்களை நியமித்தேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்தக் கூற்று என்னுடைய பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சி என்றும் ஜோன்ஸ்டன் பெர்னாணடோ மேலும் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சிகள் கலக்கமாம்

ஆளும்தரப்பு தனது திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதால் எதிர்க்கட்சிகள் கலக்கமடைந்திருக்கின்றன தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் குறித்து செய்தியாளர்களிடம் நேற்றுப் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமாரவின் 'வளமான நாடு, அழகான வாழ்க்கை' என்ற தலைப்பிலான மக்கள் மயப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் திறம்படச் செயற்படுத்தப்படுகின்றன.

அத்தகைய திட்டங்களால் நாடு முன்னேறுவதையும் சட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படுவதையும் காணும்போது, மக்களின் வலுவான ஆதரவு பெருகிவருகின்றது.

இந்த நிலமைகளால் எதிர்க்கட்சிகளின் அமைதி குலைந்துள்ளது. அவை கலக்கமடைந்துள்ளன. இதனால் போலியான ஊடகங்கள் மூலம் பொய்யான கதைகளை உருவாக்க முயற்சிக்கின்றன. ஆனால் அவர்களின் முயற்சிகள் பொதுமக்களைத் திசைதிருப்புவதில் தோல்வி கண்டிருக்கின்றன.

போதைப்பொருள் தடுப்பு மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஆளும்தரப்பு கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த நடவடிக்கைகள் அரசியல் ஆதாயத்திற்கானவை அல்ல, நாட்டின் நலனுக்காகவே என்பதை மக்கள் வெகுவாக உணர்ந்துள்ளனர். எதிர்க்கட்சிகள் மக்கள் மத்தியில் எதிமறையான நிலைமைகளை தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. ஆளும்தரப்பின் உறுதியான திட்டங்கள் மக்களின் வரவேற்பைப் பெறு;ள்ளன என்றார்

காலைக்கதிர் Kalaikkathir

# ரோஹணவின் குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கியது போல் மகிந்தவைப் பாதுகாப்பதும் இந்த ஆளும்தரப்பினது கடமை

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. வலியுறுத்து

ரோஹண விஜேவீர உயிரிழந்த பின்னர் அவரது குடும்பத்துக்கான பாதுகாப்பு இன்று வரை சகல ஆளும்தரப்புகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எந்த ஆளும்தரப்பானாலும் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அத்தியாவசியமானதாகும். ரோஹண விஜேவீரவின் குடும்பத்துக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது எனில், மகிந்த ராஜபக்சவுக்கும் பாதுகாப்பை வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்றப்பட்டுள்ள அரசுத் தலைவர்களுக்கான சிறப்புரிமைகளை நீக்கும் சட்டத்தை அனைவரும் பின்பற்றவேண்டும். ஆனால் நாட்டு குடிமகன் என்ற ரீதியில் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு தொடர்பில் அவருக்குள்ள உரிமையை நீக்க முடியாது. முன்னாள் அரசுத் தலைவரான அவரது ஓய்வூதியம், சிறப்புரிமைகள் என்பன நீக்கப்பட்டாலும் அவரது பாதுகாப்பு பலவீனப்படுத்தப்படுவதை அங்கீகரிக்க முடியாது.

போரை நிறைவு செய்வதற்கு தலைமைத்துவத்தை வகித்தவர் என்ற அடிப்படையில் கடந்த ஆளும்தரப்புகளானாலும், தற்போதைய ஆளும்தரப்பானாலும், எதிர்கால ஆளும்தரப்புகளானாலும் அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய பொறுப்பை கொண்டிருக்கின்றன. எனவே அரசியல் பழிவாங்கலுக்காக அவரது பாதுகாப்பு நீக்கப்படுவது தவறான ஒரு முன்னுதாரணமாகும்.

ரோஹண விஜேவீர உயிரிழந்த பின்னர் அவரது குடும்பத்துக்கான பாதுகாப்பு இன்றுவரை சகல ஆளும்தரப்புகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எந்த ஆளும்தரப்பானாலும் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அத்தியாவசியமானதாகும். ரோஹண விஜேவீரவின் குடும்பத்துக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது எனில், மகிந்த ராஜபக்சவுக்கும் பாதுகாப்பு வழங்குவதில் எவ்வித சிக்கலும் இல்லை.

கடந்த இரு தேர்தல்களிலும் நாட்டு மக்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை பிரதான காரணியாகக் கொண்டு தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருந்தனர். ஆனால் ஆளும்தரப்பால் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் இன்றுவரை வெளிப்படுத்தப்படவில்லை. முக்கிய குற்றவாளிகளை வெளிப்படுத்துவதில் இந்த ஆளும்தரப்பு தோல்வியடைந்துள்ளது. கால அவகாசத்தைக் குறிப்பிட்டு வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளைப் பெற்ற பின்னர், அதனைக் கைவிட்டுள்ளனர்.

இனிவரும் தேர்தல்களின்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையோருக்கு தண்டனை வழங்கப்படும் என அரசுத் தலைவர் வேட்பாளர்கள் வாக்குறுதியளிப்பதற்கு இடமளிக்காமல், உண்மைகளைக் கண்டறிந்து நாட்டுக்கு வெளிப்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

# 2 கிலோ ஹெரோயினுடன் போகுந்தரவில் 2 பேர் கைது

பிலியந்தல போகுந்தர பகுதியில் இரண்டு கிலோ கிராமிற்கும் அதிகளவான ஹெரோயின் போதைப்பொருள் தொகையுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல்காரருமான 'களுபோவில அவிஷ்க'வின் முக்கிய உதவியாளரான 'களுபோவில சுட்டி' மற்றும் அவரது மூத்த சகோதரருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடத்திய சுற்றிவளைப்பின்போது இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

அவர்களிடம் இருந்து 2.106 கிலோ கிராம் ஹெரோயின், 478 கிராம் ஐஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றையும் விசேட அதிரடிப்படையினர் பறிமுதல் செய்தனர்.

24 மற்றும் 25 வயதுடைய சந்தேகநபர்கள் பிலியந்தல பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# தெமட்டகொட 'பேஸ்லைன்' வீதியோர பாழடைந்த வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

தெமட்டகொடை பேஸ் லைன் வீதியில் களனிவெள தொடருந்து மார்க்கத்திற்கு அருகில் உள்ள பாழடைந்த வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல ஆயுதங்களை நேற்றைய தினம் பம்பலப்பிட்டி குற்றவியல் பிரிவு மீட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

அங்கிருந்து 9 மில்லி மீற்றர் ரக தோட்டாக்கள் பயன்படுத்தப்படும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி ஒன்றும், இரண்டு தோட்டாக்கள் மற்றும் ரி-56 மெகசின் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொரளை வனாத்தமுல்லே பகுதியில் செயல்படும் இரண்டு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களான வனாத்த துமிந்த மற்றும் சதுகே தரப்பிருக்கு இடையே இடம்பெற்று வரும் மோதல் காரணமாக எவரேனும் ஒருவரைக் கொலை செய்வதற்காக இந்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பொரளை வனாத்தமுல்லே பகுதியில் இந்த குழுக்களுக்கு இடையே நீடித்துவரும் முரண்பாடுகள் காரணமாக கடந்த காலங்களில் பல கொலைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெண்ணப்புவயில் சிக்கின 700 லேகியம் பாக்கெட்டுகள்

## சந்தேகநபர் ஒருவர் கைது

(சியாஜ்)

வெண்ணப்புவயில் விற்பனைக்காக வைத்திருந்த சுமார் 700 லேகியம் பாக்கெட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க குளியாபிட்டி பகுதியை சேர்ந்த குறித்த சந்தேகநபர் தான் வேலை செய்யும் இடத்தில் லேகியம் உருண்டை விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் லேகியங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றுடன் சந்தேகநபரை இன்று மாறவில நீதிவானிடம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெண்ணப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.




காலைக்கதிர் Kalaikkathir

## சிறார்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கள் தங்களின் தொழிலை பாதுகாத்துக்கொண்டு இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கும் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

மாணவர்களுக்கு கொடூரமான முறையில் தண்டனை வழங்குவதை தடை செய்யவேண்டும். அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் ஒழுக்கத்தை பாதுகாக்க முடியாதவகையில், ஒட்டுமொத்த சமூகத்துக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் சட்டம்கொண்டுவந்து, நாட்டின்கலாசாரத்துக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் ஆளும்தரப்பு கண்டுகொளளாமல்செயற்படுமாகஇருந்தால்., அதுதொடர்பில் மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும்.

அதனால் இந்த சட்டமூலம் இன்னும் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்படாததால், இந்த சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு. திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய இடங்கலில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

## ஏக்கிய ராஜ்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும்எனதமிழ்தேசியமக்கள்முன்னணி தவிர்ந்த அனைவரும் இணங்கியுள்ளனர் என்றுசிவஞானம்தெரிவித்துள்ளார். அதற்காக அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தவிர அனைத்து தரப்புக்களும் போருக்கு பிந்தைய காலத்தில் ஒற்றையாட்சிக்குள் உள்ள 13ற்கு இணங்கியிருந்தன.

ஒற்றையாட்சிக்குள் முடக்கப்படக்கூடாது. 13ஐ தொடக்கப் புள்ளியாகக் கொண்டு நகர்த்த முடியாது எனச் சொல்லியே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறினோம்.

இந்நிலையில் அந்த உண்மையை மூடி மறைக்க தாங்கள் சமஷ்டிக் கட்சி எனவும் காங்கிரஸ் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டது எனவும் தமிழ் அரசுக் கட்சி கடந்த 16 வருடங்களாக மக்கள் மத்தியில் பொய் பரப்புரை செய்தது. இப்போது தமிழ் அரசுக் கட்சி தலைவர் தனது அறிவுக்கு ஏற்ற வகையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கியுள்ளார்.

வழங்கிய காலகட்டம் மிக முக்கியமானது.

இரண்டு கிழமைக்கு முன்னராக 2015 - 2019 காலத்தில் செய்யப்பட்ட ஏக்ய ராஜ்ஜிய வரைபைதிருத்தி அதனைநாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்போவதாக தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி பிரதிநிதிகள் சுவிட்சர்லாந்தில் தெரிவித்தனர். 'ஏக்ய ராஜ்ய' என்ற ஒற்றையாட்சி வரைபை உருவாக்குவதில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி பெரும் பங்கு வகித்தது.

அந்த வரைவை அமுல்படுத்தப் போவதாக ஹரினிநாடாளுமன்றத்தில்சொல்லியிருக்கிறார். அனுரகுமாரவும் சொல்லியிருக்கிறார். அவ்வாறான தற்போதைய சூழலில் 13 ஐக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சொல்கிறார் என்றால் 'ஏக்ய ராஜ்ஜி'யவை எதிர்க்காமல் 'ஏக்கிய ராஜ்ய'வை கைவிட்டதாகச்சொல்லிக்கொண்டுஅதேநேரம் 'ஏக்கிய ராஜ்ய' வரும் போது எதிர்க்காமல் விடுவதற்கு யோசிக்கின்றனர்.

எத்தனையோவருடங்களுக்குபிறகுதமிழ் அரசுக் கட்சி தலைவர் அதை நிருபித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறோம். இந்த வேளையிலே 38 வருடம் நடைமுறைப்படுத்தாத 13ஆம் திருத்தத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தற்போது அமுல்படுத்த கோருவது 'ஏக்கிய ராஜ்ய' என்ற ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வை முடக்குவதற்காகவே - என்றார்.

## தான் கூறியதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கைது செய்யப்பட்டுள்ள 'பெலியத்த சனா' எனப்படும் சனத் வீரசிங்கவுக்கும் ஆளும்தரப்புக்கும் எந்தவொரு தொடர் பும் இல்லை என்பதை தெளிவாகக் கூறிக்கொள்கின்றோம். அவருக்கெதிரான சட்ட நடவடிக்கைகள்முறையாகமுன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் அவருக்கு ஆளும்தரப்பு எந்த வகையில் ஒத்துழைப்பு வழங்குகிறது? நீர்கொழும்பில் இடம்பெற்றதைப் போன்று, ஆளும்தரப்பிலுள்ள எவரும் சென்று பெலியத்த சனாவைக் கட்டியணைத்துக் கொள்ளவில்லை.

ஆளும்தரப்பு அவரைப் பாதுகாப்பதாக எவராலும் குற்றஞ்சாட்ட முடியும். ஆனால் ஆளும்தரப்பு என்ற ரீதியில் நாம் எந்தவொரு குற்றவாளியையும் பாதுகாப்பதில்லை. அவர்களுக்கெதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும். தமக்கான பேசுபொருளொன்று இல்லாதிருக்கும் எதிர்க்கட்சிகள் இதுபோன்ற போலிச் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

கூறப்படும் பொய்களுக்கு 24 மணித்தியாலங்களுக்குள் நாம் பதிலளித்துக் கொண்டிருக்கின்றோம். அண்மையில் அரசுத் தலைவரைப் பற்றி அவதூறு பரப்பிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரியிருக்கின்றார். அதேபோன்றுதான் தற்போது மற்றொருவரும் பெலியத்தசனாதொடர்பில்கூறியிருக்கின்றார்.

அவர்கூறுவதுஉண்மையெனில்அதனை அவர் ஆதாரங்களுடன் நிரூபிக்கவேண்டும். இது தொடர்பில் தங்காலை பொலிஸாரால் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. அவர் முன்வைத்த குற்றச்சாட்டை ஆளும்தரப்பு என்ற ரீதியில் நாம் முற்றாக மறுக்கின்றோம். நாம் சாட்சிக் கட்டளைச் சட்டத்தை அர்த்தமுள்ளதாக்குகின்றோம். அந்த சட்டத்துக்கமைய எவரும் பொய் கூற முடியாது.

புதிய ஊழல், ஒழிப்புச் சட்டத்துக்கமைய எவருக்கும் தகவல் வழங்க முடியும். ஆனால் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், பழிவாங்கலுக்காகவும் பொய்யான தகவல்களை வழங்க முடியாது. எனவே பொய்யானதகவல்களைவழங்குபவர்களுக்கு எதிராகவும், குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்களுக்கெதிராகவும் இந்த சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

பெலியத்த சனாவின் இல்லத்துக்கு யார் யார் எப்போது சென்றனர் என்பது குறித்த உண்மையான தகவல்கள் இருந்தால், அவற்றைவீரரைப்போன்றுசென்றுதங்காலை பொலிஸாரிடம் வழங்க முடியுமல்லவா? எனவே அதனை செய்யுமாறு வீரவன்சவிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.

## மருந்துப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசுப் பணிகளை மேற்கொள்ளும்போது, நூறு மீற்றர் ஓடுவது போல மிக விரைவாகச் செய்ய முடியாது. மருந்துப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண்பதில் தற்போதுள்ள சில சட்டங்கள் தடையாகவுள்ளன. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அந்தச் சட்டங்களை மாற்றுவது ஒரு சிக்கலாக இருக்கலாம். சில சிக்கல்கள் இன்று நேற்று எழுந்தவை அல்ல. பிரிட்டிஷ் காலத்திலிருந்து இவை காணப்படுகின்றன.

அவற்றை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால்அவை மிகவும் கவனமாகச் செய்யப்படவேண்டும். சுகாதார அமைச்சின் சேவையின் மீது நம்பிக்கையை வளர்ப்பது எனக்கு ஒதுக்கப்பட்ட முதல் பணியாகும். நாட்டில் தற்போதுள்ள சில சட்டங்களைப் பின்பற்றுவதன் மூலம் சில அவசரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதுள்ளது. நன்கொடையாளர்கள் அரச இராஜதந்திரம் மூலம் உதவியைப் பெற வேண்டியது அவசியமாகும்.

வைத்திசாலை செயற்பாடு மற்றும் அதற்குரிய அத்தியவசிய உபகரணங்கள் வரை நன்கொடையாளர்கள் அளிக்கும் நன்கொடைகள் மிகவும் முக்கியமானவையாகும். அடுத்த 10 ஆண்டுகளுக்கு வைத்திசாலைக்கு தேவைப்படும் அத்தியவசியமான உபகரணங்கள் சம்மந்தமான தரவுகளைப் பெற்றுக்கொள்ள சுகாதார அமைச்சு ஒரு சிறப்புத் திட்டத்தை தயாரித்து வருகிறது - என்றார்.

## அரசுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கெதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து அரசுத் தலைவர் விசாரணை ஆணைக்குழுவின்ஊடாகவிசாரணைகளை முன்னெடுக்கவேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகுமென பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மாத்தறையில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னைச் சிறையிலடைப்பதற்கு மகிந்த நடவடிக்கை எடுத்தமை தவறு என்று தற்போது நாமல் கூறுகின்றார். இப்போது படையினர் மீது இவர்களுக்குப் புதுமையான இரக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அன்று அமெரிக்க பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த எனது மகள்களை நாட்டுக்கு அழைத்து விமான நிலையத்தில் வைத்து இரவிரவாக விசாரணைக்குட்படுத்தினர். போர்க் களத்தில் நேருக்கு நேர் மோதினாலும், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன்கூட எனது குடும்பத்தில் கைவைக்கவில்லை.

அதேபோன்று எந்தவொரு படையினரின் குடும்பத்தின் மீதும் தாக்குதல்களை மேற் கொள்வதற்கும்பிரபாகரன் முயற்சிக்கவில்லை. ஆனால் ராஜபக்சக்கள் அவ்வாறானவர்கள் அல்லர். அவர்கள் மிகவும் இழிவானவர்கள். நான் கோபத்தில் பேசவில்லை. ஆனால் இதுவே யதார்த்தமாகும்.

என்னுடன் பணியாற்றிய 35 உயர் இராணுவ அதிகாரிகள் ஒய்வூதியமின்றி சேவையிலிருந்து நீக்கப்பட்டனர். அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்க வேண்டாமென ராஜபக்சக்கள் நிறுவனங்களை அச்சுறுத்தினர்.

2009 ஜனவரி - பெப்ரவரிக்கு இடைப்பட்ட காலத்தில் போர் நிறுத்தத்தை அறிவிக்குமாறு மகிந்த ராஜபக்ச பணிப்புரை விடுத்தார். பிரபாகரனை தப்ப வைப்பதற்காகவே அவரால் அந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது. அன்று அவரிடமிருந்து அந்த உத்தரவு வந்திருக்காவிட்டால் மார்ச்சில் நாம் போரை நிறைவுசெய்திருப்போம். இதனால் சுமார் 4000க்கும் அதிகமான படையினர் தமது உயிரைத்தியாகம்செய்யவேண்டியேற்பட்டது.

எதற்காக மகிந்த போர் நிறுத்தத்தை அறிவிப்பதற்கு உத்தரவிட்டார் என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும். சர்வதேசத்துடன் பேச்சு நடத்தி பிரபாகரன் உள்ளிட்டவர்கள்தப்பிச்செல்லவழியேற்படுத்திக் கொடுக்கவேண்டும்என்பதைத்தவிர, அவருக்கு வேறு எந்த நோக்கமும் இருக்கவில்லை.

மகிந்தவுக்கு இவ்வாறான தேச துரோகங்கங்கள் பழக்கமாகும். 2005 தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் ரணிலுக்கு வாக்களிப்பார்கள் என்ற அச்சத்தில், எமில் காந்தன்போன்றோரிடம்ராஜபக்சஆளும்தரப்பு பேச்சு நடத்தியதாகவும், பிரபாகரன் வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களிப்பதை தடுத்தால் அவருக்கு தேவையான உதவி ஒத்துழைப்புகளை வழங்குவதாகவும் அதன்போது இணக்கப்பாடு எட்டப்பட்டதாக 2010 தேர்தலின்போது டிரான் அலஸ் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கமைய மலேசியாவிலிருந்து படகுகளைக் கொள்வனவு செய்வதற்கு 2 மில்லியன் டொலர்கள் கோரப்பட்டு அதனை ராஜபக்ச ஆளும்தரப்பு புலிகளுக்கு வழங்கியது. அந்தக் படகுகள் மூலமாகவே புலிகள் கடற்படையினரை தாக்கினர்.

2005இல் தேர்தல் வெற்றிக்காக புலிகளுக்கு2மில்லியன்டொலர்கள்வழங்கிய மகிந்த ராஜபக்ச தேசத்துரோகியல்லவா? நாம் பயங்கரவாதிகளுடன் போர் புரிந்து கொண்டிருக்க இவர், அவர்களின் ஆயுத கொள்வனவுக்கு நிதியுதவியளிக்கின்றார். உலகில் வேறு எந்த நாட்டின் தலைவரும் இவ்வாறுசெயற்பட்டிருந்தால்நிச்சயம்கொலைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கும். மகிந்தவை தூக்கிலிட்டு கொலைத் தண்டனையை நிறைவேற்றியிருக்கவேண்டும். இந்த ஆளும்தரப்புக்குத் துணிவிருந்தால் அது தொடர்பில் மீள விசாரணைகளைத் தொடங்கவேண்டும்.

2005இல் இவ்வாறு 2 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டதை பஸில் ராஜபக்ச என்னிடம் தெரிவித்தார். அதனையே டிரான் அலஸ் 2010இல் நாட்டுக்கு வெளிப்படுத்தினார். அன்று நான் இராணுவத் தளபதியாக பணியாற்றியதால் பஸிலுக்கு எதிராகப் போரைப் பிரகடனப்படுத்த முடியாது.

நான் நிலத்தைப் பார்த்துக் கொண்டு அதனை கேட்டுக் கொண்டிருந்தேன். எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு மகிந்த மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்குக் காணப்படுகிறது. அரசுத்தலைவர் விசாரணை ஆணைக்குழுவை நிறுவி விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு


076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





# கோட்டைக்கல்லாற்றில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் நினைவு விழா






(சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது பிரதேச ஆலயங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுடன்இணைந்துஏற்பாடுசெய்தமுத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நினைவு விழா ஒக்டோபர் 05ஆம் நாள் பிரதேச செயலாளர் உதய ரீதர் தலைமையில் கோட்டை கல்லாறு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கோட்டைக்கல்லாறு கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் அறநெறிப்பாடசாலைமாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான பண்பாட்டு ஊர்வலமானது ஊர் வீதிகளுடாக கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயத்தை அடைந்ததும், பிரதேச செயலாளர் சுவாமி விபுலானந்தரின் திருவுருவத்திற்கு மாலை அணிவித்தல் மற்றும் பூசை நிகழ்வுடன் பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன்போதுஅறநெறிப்பாடசாலை மாணவர்களினால்சுவாமிவிபுலாநந்தர் தொடர்பான கதாப்பிரசங்கம், பேச்சு, பாடல், நாடகம் மற்றும் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்வுகள்ஆற்றுகைசெய்யப்பட்டது.

மேலும் கதாபிரசங்கம் மற்றும் வில்லுப்பாட்டுநிகழ்வுகளுக்குகிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிகழ்வில்கோட்டைக்கல்லாறு ஆலயங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்கள்

மற்றும் மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## பெரிய பள்ளிவாசலுக்குரிய நெற்காணி குத்தகை நிகழ்வு



(ஸாகிர்)

சாய்ந்தமருது- மாளிகைக்காடு ஜும்ஆபெரியபள்ளிவாசலுக்குரிய நெற்காணிளை குத்தகைக்கு வழங்கும் நிகழ்வு நம்பிக்கையாளர் சபையின் தலைவர் முபாறக் தலைமையில் பள்ளிவாசலில் நேற்று நடைபெற்றது.

மிகவும் சுமூகமான முறையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விவசாயிகள் நியாயமான முறையிலும், நீதியாகவும் நடந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட விவசாயிகள், நம்பிக்கையாளர் சபையின் காணி கூறலுக்கான குழுவினர், உறுப்பினர்கள் ஆகியோருக்குக் காணிகள் சம்பந்தமான விளக்கங்களை றஸீட் வழங்கியதோடு ஏலம் கூறுதலுக்காக சஹாப்தீன் உதவி வழங்கினார்.

## போயா விடுமுறை நாளில் வீட்டில் மது விற்றவர் கைது




(பாறுக் ஷிஹான்)

போயா விடுமுறை நாளில் வீட்டில் சட்டவிரோதமாக மது விற்பனையில்ஈடுபட்டவர் கைதாகியுள்ளார்.

கல்முனை பிராந்திய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிற்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வீடு ஒன்றில் இயங்கிவந்த சட்டவிரோத மது விற்பனை நிலையம் சிக்கியது.

கல்முனைதலைமையகபொலிஸ்பிரிவுக்குட்பட்ட சேனைக்குடியிருப்பில் அமைந்திருந்த வீட்டில் நடந்து வந்த இந்த விற்பனையை அங்கு மாறுவேடத்தில் சென்ற போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பணியாளர் ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடித்தார்..

இவ்வாறு கைதானவர் சட்ட விரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் விற்பனைக்காக மறைத்து வைத்திருந்த 40க்கும் அதிகமான பியர்கள், 25க்கும் மேற்பட்ட மதுபானப் போத்தல்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபரை இன்று கல்முனை நீதிவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கல்முனைக் கரை வலைகளில் அள்ளுண்டுவரும் பெரு மீன்கள்




(பாறுக் ஷிஹான்)

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக பெரும் மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 2 வகையான பெரும் சூரை மீன்கள், வளையா மீன்கள் என்பன கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டு பல இலட்சம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டன.

நேற்று இவ்வாறு காரைதீவு மற்றும் நிந்தவூர் பகுதிகளில் சூரை இன மீன்கள் அதிகளவாக கரைவலைகளுக்கு பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சூரை மீன் ஒன்று 1300 ரூபா முதல் 1500 வரை விற்பனையானது. இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களினால் ஒரு மீனவரின் நாள் வருமானம் 5 முதல் 6 இலட்சம் வரை எகிறியது.

தற்போது கல்முனை பிராந்திய கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தூண்டில் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில்கரைவலைமீனவர்களுக்குஇவ்வாறான பெரும் மீன்கள் தொகுதியாகப் பிடிபடுகின்றன.

# பிரதி அமைச்சர்கள் இரட்டை வேடம் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கருத்து

(ஹஸ்பர்)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகளின் விவசாய காணி அபகரிப்புக்குட்பட்டதையடுத்து இங்குள்ள பிரதியமைச்சர் இரட்டை வேடம் போட்டுள்ளார் எனவும் ஆளும்தரப்புப் பக்கம் இருக்கும்போது ஒரு நிலைப்பாடும் 2024ஆம் ஆண்டில் மக்களுக்கு சார்பாக இன்னொரு நிலைப்பாடு என இரட்டை வேடம் போடும் பிரதியமைச்சர் இங்குள்ளார் என ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளர் மிப்லான் மௌலவி தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக முத்து நகர் விவசாயிகளின் காணி மீட்புக்கான போராட்டம் நேற்று (06) 20 ஆவது நாட்களாக சத்தியாக் கிரகப் போராட்டம் இடம் பெற்று வருகின்றன.

அவர்களுடனான சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலைமாவட்டத்தில்உள்ளமுஸ்லீம்கள் தற்போது அநீதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். புல்மோட்டை தொடக்கம் குச்சவெளி மீனவர்கள் பிரச்சினை நில உரிமைக்கான போராட்டம் என தற்போது முத்து நகர் வரை செல்கிறது. கடந்த காலத்தில் ஆட்சியாளர்கள் பொய் சொல்லி

வாக்குகளை பெற்று முஸ்லீம் சமூகத்தின் வாக்குகளை ஏர்ஜன்ட் மூலமாக கொழும்பில் விற்றார்கள். முஸ்லீம் தலைமைகளை புறந்தள்ளி விட்டே தற்போது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பை முஸ்லீம் சமூகம் ஆதரவளித்தது. பொதுத் தேர்தலிலும் ஆதரவளித்தார்கள். இதற்காகஅரசுத் தலைவர் முத்து நகர் மக்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். ஊழல்,இனவாதம்,போதைப் பொருள் தடுப்பு போன்ற விடயங்களுக்கு எதிராக உள்ள அநுர ஆளும்தரப்பு முத்து நகர் விவசாயிகளுக்கும் ஆதரவாகச் செயற்படவேண்டும்.

இதுபோன்று கிழக்கு மாகாண மக்கள் சிவில் சமூகம்,உலமாக்கள் ஒன்றிணைந்து இம் மக்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டும். எதிர்வரும் ஜும்ஆ தொழுகையின்பின் அனைத்து பள்ளிகளும் இணைந்து உலமா சபை இணைந்து இம் மக்களின் அநீதிக்காக குரல் கொடுங்கள் இவர்களுக்காக கொழும்பில் சுமார் பத்தாயிரம் கையொப்பங்களை சேகரித்து அரசுத் தலைவரிடம் கையளிக்கவுள்ளோம் என்றார்.

கடந்த ஆகஸ்ட் 20 ஆம் திகதி புர்கினே பாசோ (யற்ஷவஷ்ஐழி ய்ழிவிலி) நாட்டின் இன்றைய இளம் அதிபர் இப்ராகிம் தராரே (ஞூணுஷழிஜ¬ஷ்து வீஷழிலிஷள) ஒருதுணிச்சலான அதிரடி முடிவை எடுத்தார். ஐ.நா வின் ஒருங்கிணைப்பாளர் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்பதுதான் அந்த முடிவு.

உலகின் இருண்ட கண்டம் என அழைக்கப்படும் ஆபிரிக்காவிலயே விடிவெள்ளி என்று தற்காலத்தில் கூறப்படும் இப்ராகிம் தராரே தான் இந்த அதிரடியான முடிவை எடுத்துள்ளார்.

உலகில் உள்ள ஏழை நாடுகளிலும் அரசியல் மாற்றம் சாத்தியம் என்பதற்கு இப்ராகிம் தராரே என்ற இளம் வீரரின் வருகை விடிவெள்ளியாக மிளிர்கிறது. ஆபிரிக்காவில் புதிய இளம் தலைவரான, மேற்குலகின் சிம்ம சொப்பனமாக இப்ராகிம் தராரே விளங்குகிறார்.

### ஆபிரிக்காவின் இளம் சூரியன்:

இப்ராகிம் தராரே அந்நாட்டின் தலைமைப் பொறுப்பை எடுத்தவுடன், அங்கிருந்த தொலைத்தொடர்பு மற்றும் செய்திப்பரிமாற்ற அலவலகங்களை இரகசியமாக கையிலெடுத்துக் கொண்டார். அப்போதிருந்து ஐ.நாவின்




# மேற்குலக சிம்ம சொப்பனம் ஆபிரிக்காவின் விடிவெள்ளி

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

வதிவிட ஒருங்கிணைப்பாளர் மேற்குலக நாடுகளின் தூதுவராலயங்களுடன் தொடர்பிலிருந்து ஒற்றனாக வேலைசெய்ததைக் கண்டறிந்தார்.

ஐ.நா அடுத்ததாக என்ன செய்யும் என்பது இப்ராகிம் தராரேக்கு நன்றாகத் தெரியும். எதிர்க்கட்சியிலிருந்து யாராவது ஒருவருக்கு உருவேற்றி கிளர்ச்சியை உண்டுபண்டும். பின்னர் அமைதி பேணும் படை என்ற பெயரில் பன்னாட்டுப் படையை அனுப்பி, அந்நாட்டு வளத்தைக் கொள்ளையடிக்கும் மேற்குலக நிறுவனங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்.



இறுதியில் ஏதோ ஒரு நாடு சமாதானம் செய்கிறோம் என்ற பெயரில் புகுந்து தன் மண்ணின் வளங்களைக் காப்பவனுக்கெதிராகச் சதிசெய்து அவனை அழிக்கும். இதுதான் காலாதிகாலமாக ஆபிரிக்காவிலும் கீழைத்தேய நாடுகளிலும் நடக்கும் விடயமாகும்.

இது எனது நாடு, எனது வளங்கள் எனது மக்களுக்கே, நீ வெளியே போ, இவ்வளவும்தான் இப்ராகிம் தராரேவின் அடிப்படை. அவருக்கு மக்கள் ஆதரவும் பெருகிக்கொண்டே போகிறது. தோமஸ் சங்காரா (வீஜ¬லிதுழிவிறீழிஐவழிஷழி) அளவிற்கு இல்லாவிடினும் இப்ராகிம்தராரே மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறார்.

உலகிற்கு நாட்டாமை என்ற பெயரில் மேற்குலக அரசுகளுக்குச்சார்பாகஐநாசெய்யும்திருகுதாளங்களையும். ஒற்றர் வேலைகளையும் இப்ராகிம் தராரே அப்பட்டமாக வெளிப்படுத்தி இருக்கிறார் என்பதை அறிந்து அமெரிக்கா கடுங்கோபம் கொண்டுள்ளது.

அந்நாட்டில் மேம்பாடு, மறுசீரமைப்பு என்ற பெயரில் அனைத்துப் பகுதிகளுக்கும் உள்நுழைந்து, ஐ.நா அலுவலகங்களுக்குள் பணிபுரிந்தவர்கள், இராணுவ தளங்கள் பற்றிய தகவல்களை மின்னஞ்சல்களூடாக வெளியே அனுப்பிக் கொண்டிருப்பதை இப்ராகிம் தராரே உளவாளிகள் மூலம் உறுதி செய்தார்.

உள்நாட்டுக்குள்கிளர்ச்சி ஆர்ப்பாட்டங்களை ஊக்குவிக்கும். அதனால்தலைமைஅமைதியாகவே இருந்தது. ஆனாலும் ஐ.நா தம்மிடம் வளமாகச் சிக்கும் என்பதும் இப்ராகிம் தராரேக்கு நம்பிக்கையாக தெரியும்.



ஆனால் மேற்குலக ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட இப்ராகிம் தராரே சீனாவோடும், ரஷ்யாவோடும் கூட்டுச் சேர்ந்திருக்கிறார். அவரே ஐ.நா மண்டபம் இன்னும் சிலவருடங்களில் கண்காட்சிக் கூடமாகும் என அடிக்கடி சொல்வார்.

பிரெஞ்சு அரசு தனது சொந்த நலனுக்காக ஆபிரிக்காவில் அதிகார வர்க்கங்களின் போட்டிகளை கையாள்வதில் நீண்ட காலசாதனையை கொண்டுள்ளது. அத்துடன் பாரிஸ் அதன் முன்னாள் ஆபிரிக்க காலனித்துவ சாம்ராஜ்யத்தில் எண்ணற்ற இராணுவ சதிகளையும் ஏற்படுத்தி வெற்றி கண்டுள்ளது.

### தராரே என்ற புரட்சியாளன்:

இன்று மேற்குலகத்தைக் கலங்கடித்து, மேற்குலக ஆதிக்கத்திலிருந்துமுழுஆபிரிக்காவையும்மீட்டெடுப்போம் என்று சபதமிட்டு அதற்காகத் துரிதமாகாக் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார் இப்ராகிம் தராரே என்ற இளம் ஆபிரிக்க வீரர்.

அன்றைய புர்கினா பாசோ (யற்ஷவஷ்ஐழி ய்ழிவிலி) நாட்டின் புரட்சியாளன் தோமஸ் சங்காரா கிளர்ந்தெழுந்தபோது உலக அரச பயங்கரவாதத்தால் அவர் படுகொலை செய்யப்பட்டார். ஆனால் தற்போது அந்த வரலாறு மீள திரும்புகிறது. மூன்று தசாப்தங்கள் கழித்து அந்த மண்ணிலிருந்து இப்ராகிம் தராரே என்ற புரட்சியாளன் வெடித்துக் கிளம்பியிருக்கிறான்.

பாட்ரிஸ் லுமும்பாவில் தொடங்கி சமோரா மோசஸ் மார்சல், தோமஸ் சங்கரா என்று ஆபிரிக்கப் புரட்சியாளர்களின் பட்டியல் நீளமானது. அதில் தற்போது இப்ராகிம் தராரே இணைந்து கொள்கிறார்.

காலனித்துவ காலத்தின் பின்னர் தாம் வெளியேறும் போதுதமதுகனிமவளசுரண்டலைதொடர்வதற்க்காக ஒரு பொம்மை அரசை நிறுவுவது மேற்கு ஐரோப்பியர்களின் வழக்கம். அப்படியான பொம்மை அரசை உதறித் தவிர்த்து சுயாதீன அரசை நிறுவியவர். ஐரோப்பிய - பிரான்ஸ் படைகளை ஆபிரிக்க நாடான புர்கினோ பாசோவை விட்டு வெளியேற்றியவர் இப்ராகிம் தராரே ஆவார்.

### புர்கினா பாசோவின் விடிவெள்ளி:

தற்போது மாலி உட்பட பல ஆபிரிக்க நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சியை முன்னெடுத்து வருகிறார். பலமிக்க ஒன்றிணைந்த ஒற்றுமையான ஆபிரிக்க பொருளாதாரம் மூலமே உலக சாம்ராஜியங்களின் சுரண்டலை ஒழிக்கலாம் என்பதை உணர்ந்து புரிந்தவர்.

அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவத்தை நிராகரித்து ஏழை நாடுகள் எப்படி உலகில் அரசியல் செய்ய முடியும், என்ற கேள்விக்கு விடையை அறியத் தந்துள்ளார். அதாவது சமத்துவ தேடலின் விடிவெள்ளியாக, சங்காராவின் அரசியல் வாரிசாக, மேற்கு ஆபிரிக்காவின் இளம் சூரியனாக தோற்றம் பெற்றுள்ளார் இந்த இப்ராகிம் தரோரே ( ஞூணுஷழிஜ¬ஷ்து வீஷழிலிஷள).

பாரிஸின்காலனித்துவகொள்கைகளைவிமர்சித்துவந்த ஆபிரிக்க ஆட்சிகளை வெளியேற்றுவதற்கு, ஆபிரிக்க நாடுகளில் பல சதிப்புரட்சிகளை பிரான்ஷ் மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளது.

1987 இல், புர்கினா பாசோவில், சோவியத் சார்பு ஜனாதிபதி தோமஸ் சங்கராவை தூக்கியெறிந்து, அவரை கொலை செய்த பின்னர் பிளைஸ் கம்போரேவை பிரெஞ்சு அரசாங்கம் ஆதரித்தது. ஆபிரிக்காவின் மிக மோசமான அகதிகள் நெருக்கடிகளில் ஒன்றான, புர்கினா பாசோவில் நடந்துவரும் சண்டையால் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் பல்லாயிரக்கணக்கானோர் பட்டினியின் விளிம்பிற்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக புர்கினா பாசோ, நைஜர், மாலியில் முன்னாள் காலனித்துவ சக்தியான பிரான்சை தங்கள் நாடுகளில் இருந்து, அதனது படைகளை திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொண்டன. தற்போது மேற்கு ஆபிரிக்கா முழுவதும் அரசியல் ரீதியாக பிரான்சை எதிர்க்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# குருக்கள் மடம் இராணுவ முகாமை அகற்ற நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## சாணக்கியன் எம்.பி. கருத்து.

(சக்திவேல்)

குருக்கள் மடம் பாடசாலையில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முகாம் உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 4 இராணுவ முகாம்களை அகற்றுவதற்காக ஒரு மாத கால அவகாசம் தரும்படி அரசுத்தலைவர் அநுரகுமார கோரி இருக்கின்றார் என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டு கழகத்தின் மாபெரும் மின்னொளி கரப்பந்தாட்ட சமரின் இறுதிப்போட்டி ஞாயிற்றுக்கிழமை நாள் இரவு குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கழகத் தலைவர் பிரியதர்சன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது அட்டாளைச்சேனை கோல்ட் ஸ்டார் விளையாட்டு கழகம் முதலிடத்தையும், குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டு கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்து கொண்டிருந்தார்.

இதன் போது வெற்றியீட்டிய அணிகளுக்கு கேடயங்களும், பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.இங்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

குருக்கள்மடம் கிராமத்திலே பொது நிகழ்வுகளை நடத்துவதற்குரிய கலாசார மண்டபம் இல்லை, குருக்கள்மடம் கிராமத்தின் பழைய பாடசாலையில் அமைந்திருக்கின்ற இலங்கை இராணுவ முகாமை அகற்றதல், அத்தோடு குருக்கள் மடம் பொது மயானத்துக்கு செல்கின்ற பிரதான வீதி புனரமைப்பு போன்ற வேலைத்திட்டங்களை பூர்த்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கையை முன் வைத்திருந்தார்கள். அதில் ஒரு கோரிக்கையை கடந்த காலத்தில் பூர்த்தி செய்து கொடுக்க முடிந்திருந்தது. எனினும் இந்த மக்கள் என்னிடம் விடுத்த இரண்டாவது கோரிக்கையாக உள்ள குருக்கள்மடம் பாடசாலை கட்டடத்தில் இயங்கி வருகின்ற இராணுவ முகாம் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவித்தார்.

குருக்கள்மடம் இராணுவ முகாமை அகற்றுவது தொடர்பில் நாம் அரசுத் தலைவருடன் 3 தடவைகள் இது தொடர்பில் பேசியிருக்கின்றோம் இங்கு அமைந்திருக்கின்ற இராணுவத்தினருடன் எனக்கு எதுவித கோபங்களும் இல்லை. குருக்கள்மடம் கிராமத்திலே இருக்கின்ற மைதானத்தை விரிவாக்க வேண்டும். அதற்கு பாடசாலைக் கட்டடத்தை மீட்டெடுக்க வேண்டும். அதில் அருகில் இருக்கின்ற சிறுவர் பூங்காவைப் மறுசீரமைப்புச் செய்யவேண்டும். இதற்காகவே அங்கே இருக்கின்ற இராணுவத்தினரை அகற்றுமாறு கூறுகின்றோம்.

இந்த விடயம் குறித்து அரசுத் தலைவர் பாதுகாப்பு அமைச்சு தொடர்பான நடைபெற்ற கடந்த




கூட்டத்திலேயே உரையாடி இருக்கின்றார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற குருக்கள்மடம் இராணுவமுகாம், பாலையடிவட்டை இராணுவமுகாம், முறக்கொட்டாஞ்சேனை இராணுவமுகாம், காயங்கேணி இராணுவமுகாம் ஆகிய நான்கு இடங்களில் இருக்கின்ற ராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பில் ஒரு மாத காலம் அவகாசம் தருமாறு அரசுத் தலைவர் கேட்டிருக்கின்றார்.இந்நிலையில்முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது.

தாங்கள்தான் இராணுவ முகாம்களை அகற்றுவதற்காக குரல் கொடுத்தனர் என்று பலர் வந்து தற்போது கருத்துத் தெரிவித்துக் கொண்டிருப்பது வேடிக்கையாக உள்ளது. அது எனக்குப் பிரச்சனை இல்லை. எவ்வாறு இருந்தாலும் இராணுவ முகாம் அகற்றப்பட்டால் போதுமானது என்றார்.

# இலங்கை ஆசிரியர் சங்க மாநாடு வவுனியாவில் சிறப்பாக நடந்தது





இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாநாடு வவுனியாவில்ஞாயிற்றுக்கிழமைசிறப்பாக இடம்பெற்றது.வவுனியா, சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்று குறித்த மாநாடு இடம்பெற்றது.

உலக ஆசிரியர் தினமான நேற்று அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகளைமுறியடித்து உரிமைகளை வென்றெடுப்போம் எனும் தொனிப்பொருளில் குறித்த மாநாடு முன்னெடுக்கப்பட்டது.

சங்கத்தின்வவுனியாகிளையின்தலைவர் நேசராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின், தலைவர் பிரியந்த பெர்ணான்டோ, வடமாகாண உபதலைவர் தீசன் திலீபன், உபதலைவி ரசிக்கா உட்படச் சங்கத்தின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

# தனியார் கல்வி நிலையத்தில் பிரதேச சபை தவிசாளர் ஆய்வு

(சக்திவேல்)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையினால் ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர்களின் நலன் கருதியும், அதிகரித்து வரும் தொடர் கற்பித்தல் நடவடிக்கைகளினால் மாணவர்களின் உள நலத்தை பாதுகாக்கும் நோக்கிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் பூட்டப்பட வேண்டும் என கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் அறிவிப்பு விடுவிக்கப்பட்டிருந்தன.

கடந்த வாரம் முதல் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல தனியார் கல்வி நிலையங்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் பூட்டப்பட்டன.

இதனிடையே பிரதேச சபை தவிசாளருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய ஒக்டோபர் 05ஆம் நாளன்று மகிழூரில் கிராமத்தில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தார்.

அதிகரித்து வரும் தொடர் கற்பித்தல் நடவடிக்கைகளினால் மாணவர்களின் உள நலத்தை பாதுகாக்கும் நோக்கில்தான் நாங்கள் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் தனியார் கல்வி நிலையங்களை மூடுமாறு கேட்டுக் கொண்டுள்ளோம்.

மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கவேண்டும். நாங்கள் கற்பித்தலுக்கு எதிரானவர்கள் அல்ல. இருப்பினும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரமாவது மாணவர்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும், ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர்கள் அறநெறிப் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டும், உறவினர்களின் வீடுகளுக்குச் செல்ல வேண்டும், வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பிள்ளைகளை சுதந்திரமாக விடவேண்டும் என்பதற்காகவே நாம் இவ்வாறு தீர்மானித்துள்ளோம் என இதன்போது தவிசாளர் வினோராஜ் தெரிவித்துக் கொண்டார்.

# ஊடகவியலாளர்களுக்கு கௌரவிப்பு

(அபு அலா)

குரு ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் ஊடக உலகில் சிறந்த சாதனையாளர்களை கௌரவிக்கும் பிரம்மாண்டமான விருது வழங்கும் விழா, ஒக்டோபர் 12ஆம் நாள் சாய்ந்தமருது லீ மெரீடியன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஊடகத்துறையில் சிறந்த சாதனையாளர்களை உலகிற்கு அடையாளங்காட்டும் இவ்விருது விழாவில் 40 ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதில் 30க்கும் மேற்பட்ட பிரிவுகளின்கீழ் ஊடகவியலாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியாளர், யூடியூப்பர், டிஜிட்டல் கலைஞர், எழுத்தாளர்கள், அறிவிப்பாளர்கள் ஆகியோரே இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.




# கார் – முச்சக்கரவண்டி பாலமுனையில் விபத்து

(றிபாஸ்)

கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியின் பாலமுனை பிரதேசத்தில் கார் மற்றும் முச்சக்கரவண்டி மோதியதில் கார், முச்சக்கரவண்டியும் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இச்சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் கயமடைந்த சாரதிகள் பாலமுனை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதுடன் மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.











இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.10.2025இல் வெளியிடப்பெற்றது